وَاِذَا الْمَوْءٗدَةُ سُئِلَتْ ۝۸ بِاَیِّ ذَنْۢبٍ قُتِلَتْ ۝۹ وَاِذَا الصُّحُفُ
نُشِرَتْ ۝۱۰ وَاِذَا السَّمَآءُ كُشِطَتْ ۝۱۱ وَاِذَا الْجَحِیْمُ سُعِّرَتْ ۝۱۲
وَاِذَا الْجَنَّةُ اُزْلِفَتْ ۝۱۳ عَلِمَتْ نَفْسٌ مَّاۤ اَحْضَرَتْ ۝۱۴ فَلَاۤ
اُقْسِمُ بِالْخُنَّسِ ۝۱۵ الْجَوَارِ الْكُنَّسِ ۝۱۶ وَالَّیْلِ اِذَا عَسْعَسَ ۝۱۷
وَالصُّبْحِ اِذَا تَنَفَّسَ ۝۱۸ اِنَّهٗ لَقَوْلُ رَسُوْلٍ كَرِیْمٍ ۝۱۹ ذِیْ
قُوَّةٍ عِنْدَ ذِی الْعَرْشِ مَكِیْنٍ ۝۲۰ مُّطَاعٍ ثَمَّ اَمِیْنٍ ۝۲۱ وَ
مَا صَاحِبُكُمْ بِمَجْنُوْنٍ ۝۲۲ وَلَقَدْ رَاٰهُ بِالْاُفُقِ الْمُبِیْنِ ۝۲۳
وَمَا هُوَ عَلَى الْغَیْبِ بِضَنِیْنٍ ۝۲۴ وَمَا هُوَ بِقَوْلِ شَیْطٰنٍ
رَّجِیْمٍ ۝۲۵ فَاَیْنَ تَذْهَبُوْنَ ۝۲۶ اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ لِّلْعٰلَمِیْنَ ۝۲۷
لِمَنْ شَآءَ مِنْكُمْ اَنْ یَّسْتَقِیْمَ ۝۲۸ وَمَا تَشَآءُوْنَ اِلَّاۤ اَنْ
یَّشَآءَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِیْنَ ۝۲۹ ع ۱ ۹ ۲

## سُوْرَةُ الْاِنْفِطَارِ مَكِّیَّةٌ وَّهِیَ تِسْعَ عَشْرَةَ اٰیَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

اِذَا السَّمَآءُ انْفَطَرَتْ ۝۱ وَاِذَا الْكَوَاكِبُ انْتَثَرَتْ ۝۲ وَاِذَا الْبِحَارُ
فُجِّرَتْ ۝۳ وَاِذَا الْقُبُوْرُ بُعْثِرَتْ ۝۴ عَلِمَتْ نَفْسٌ مَّا قَدَّمَتْ وَاَخَّرَتْ ۝۵

8. உயிருடன் புதைக்கப்பட்ட (பெண் குழந்தையான) வளும் வினவப்படும்போது_
9. எக்குற்றத்திற்காக அவள் கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது)_
10. (விசாரணைக்காக மனிதர்களுடைய) பதிவுப் புத்தகங்களும் விரிக்கப் படும்போது_
11. வானமும் (பிளந்து) அகற்றப்படும்போது_
12. நரகமும் கடுமையாக எரிக்கப்படும்போது_
13. சுவனமும் (பயபக்தியுடையோருக்காக அலங்கரிக்கப்பட்டு) சமீபமாகக் கொண்டுவரப்படும்போது_
14. ஒவ்வோர் ஆத்மாவும் தான் (உலகில் செய்து) கொண்டுவந்ததை நன்கறிந்து கொள்ளும்.
15. (மனிதர்களே! நட்சத்திரங்களில்) பின் சென்று விலகக் கூடியவற்றைக் கொண்டு நான் சத்தியம் செய்கிறேன்.
16. (அவை) செல்கின்றவை; மறையக்கூடியவை.
17. இரவின் மீதும் சத்தியமாக! அது பின்னோக்கிச் சென்றுவிடும்போது_
18. காலையின் மீதும் சத்தியமாக! அது (வெளிப்பட்டு, அதன் ஒளி) தெளிவாகிவிடும்போது_
19. நிச்சயமாக (குர்ஆன் என்னும்) இது, மிக்க கண்ணியமுள்ள (ஜிப்ரீல் என்னும்) ஒரு தூதரின் (மூலம் அனுப்பப்பட்ட) கூற்றாகும்.
20. அவர் மிக்க சக்தியுடையவர்; அர்ஷுக்குரியவனிடம் பெரும் பதவியுடையவர்.
21. (வானுலகமான) அங்கு (மலக்குகளால்) கீழ்ப்படியப்படுபவர்; மிக்க நம்பிக்கைக்குரியவர்.
22. (மக்கா வாசிகளே! நம்முடைய தூதராகிய) உங்களுடைய தோழர் பைத்தியக்காரருமல்லர்.
23. மேலும், திட்டமாக (ஜிப்ரீலாகிய) அவரைத் தெளிவான அடிவானத்தில் அவர் கண்டார்.
24. அவர், (அவருக்கு வானிலிருந்து அறிவிக்கப்படும்) மறைவானவற்றின்மீது உலோபத்தனம் செய்பவருமல்லர்.
25. இது விரட்டப்பட்ட ஷைத்தானின் சொல்லும் அல்ல.
26. ஆகவே, (இதனை ஒதுக்கிவிட்டு) நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?
27. இது அகிலத்தார்க்கெல்லாம் உபதேசமேயன்றி வேறில்லை.
28. உங்களில் (நேர் வழியில்) நிலைத்திருக்க நாடுகிறவருக்கு (இது ஒரு அறிவுரையாகும்).
29. இன்னும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி, நீங்கள் (நல்லறிவுபெற) நாடமாட்டீர்கள்.

---

அத்தியாயம் : 82

## அல் இன்ஃபிதார் _ வெடித்துப்போகுதல்

வசனங்கள் : 19 மக்கீ ருகூஃ : 1

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. வானம் வெடித்துவிடும்போது_
2. நட்சத்திரங்களும் உதிர்ந்து (சிதறி) விடும்போது_
3. கடல்களும் பொங்கவைக்கப்பட்டு (அவைகளுக்கு மத்தியிலுள்ள திரைகள் அகற்றப்பட்டு ஒன்றாகி) விடும்போது_
4. மண்ணறைகளும் மேலும் கீழுமாக புரட்டப்பட்டு (அவற்றிலுள்ள இறப்பெய்தியோரை வெளியேற்றப்பட்டு) விடும்போது_
5. ஒவ்வோர் ஆத்மாவும், (மறுமைக்காக) தான் முற்படுத்தியதையும் பிற்படுத்தியதையும் நன்கறிந்து கொள்ளும்.

يٰۤاَيُّهَا الۡاِنۡسَانُ مَا غَرَّكَ بِرَبِّكَ الۡكَرِيۡمِۙ ۶ الَّذِىۡ خَلَقَكَ
فَسَوّٰٮكَ فَعَدَلَكَۙ ۷ فِىۡۤ اَىِّ صُوۡرَةٍ مَّا شَآءَ رَكَّبَكَؕ ۸ كَلَّا بَلۡ
تُكَذِّبُوۡنَ بِالدِّيۡنِۙ ۹ وَاِنَّ عَلَيۡكُمۡ لَحٰـفِظِيۡنَۙ ۱۰ كِرَامًا كَاتِبِيۡنَۙ ۱۱
يَعۡلَمُوۡنَ مَا تَفۡعَلُوۡنَ ۱۲ اِنَّ الۡاَبۡرَارَ لَفِىۡ نَعِيۡمٍۚ ۱۳ وَّاِنَّ
الۡفُجَّارَ لَفِىۡ جَحِيۡمٍۚ ۱۴ يَّصۡلَوۡنَهَا يَوۡمَ الدِّيۡنِ ۱۵ وَمَا هُمۡ
عَنۡهَا بِغَآٮِٕبِيۡنَؕ ۱۶ وَمَاۤ اَدۡرٰٮكَ مَا يَوۡمُ الدِّيۡنِۙ ۱۷ ثُمَّ مَاۤ
اَدۡرٰٮكَ مَا يَوۡمُ الدِّيۡنِؕ ۱۸ يَوۡمَ لَا تَمۡلِكُ نَفۡسٌ لِّنَفۡسٍ
شَيۡـــًٔا ؕ وَالۡاَمۡرُ يَوۡمَٮِٕذٍ لِّلّٰهِ ۱۹ ع ۱۹ ۱

## سورة المطففين مكية وهي ستة وثلاثون اٰية

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

وَيۡلٌ لِّلۡمُطَفِّفِيۡنَۙ ۱ الَّذِيۡنَ اِذَا اكۡتَالُوۡا عَلَى النَّاسِ يَسۡتَوۡفُوۡنَ ۲
وَاِذَا كَالُوۡهُمۡ اَوْ وَّزَنُوۡهُمۡ يُخۡسِرُوۡنَؕ ۳ اَلَا يَظُنُّ اُولٰٓٮِٕكَ اَنَّهُمۡ
مَّبۡعُوۡثُوۡنَۙ ۴ لِيَوۡمٍ عَظِيۡمٍۙ ۵ يَّوۡمَ يَقُوۡمُ النَّاسُ لِرَبِّ
الۡعٰلَمِيۡنَؕ ۶ كَلَّاۤ اِنَّ كِتٰبَ الۡفُجَّارِ لَفِىۡ سِجِّيۡنٍؕ ۷ وَمَاۤ اَدۡرٰٮكَ
مَا سِجِّيۡنٌؕ ۸ كِتٰبٌ مَّرۡقُوۡمٌؕ ۹ وَيۡلٌ يَّوۡمَٮِٕذٍ لِّلۡمُكَذِّبِيۡنَۙ ۱۰

6. மனிதனே! கொடையாளனாகிய உமதிரட்சகனுக்கு மாறு செய்ய உன்னை ஏமாற்றியது எது?
7. (உமதிரட்சகனாகிய)அவன் எத்தகையவனென்றால், உன்னை (ஒரு துளி விந்திலிருந்து)ப் படைத்து, பின்னர் உன்னை ஒழுங்காக அமைத்து, (உன் தோற்றத்தை) சரியாக ஆக்கினான்.
8. எந்த வடிவத்தில் அவன் நாடினானோ (அதில்) உன்னைப் பொருத்தினான்.
9. அன்று! எனினும் கூலி கொடுக்கப்படும் (மறுமை) நாளை நீங்கள் பொய்யாக்குகின்றீர்கள்.
10. நிச்சயமாக உங்கள் மீது பாதுகாவலர்களும் (நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர்.
11. அவர்கள் (மலக்குகளிலுள்ள) கண்ணியமான எழுத்தாளர்கள்.
12. நீங்கள் செய்பவற்றை அவர்கள் அறிந்து (எழுதிக்) கொள்வார்கள்.
13. நிச்சயமாக நல்லோர் சுகபோகத்தில் இருப்பார்கள்.
14. இன்னும், நிச்சயமாக தீயோர் நரகத்தில் இருப்பார்கள்.
15. கூலி கொடுக்கப்படும் நாளில் அதில் அவர்கள் நுழைவார்கள்.
16. அவர்கள் அதிலிருந்து மறைந்து (தப்பி) விடக்கூடியவர்களுமல்லர்.
17. (நபியே!) கூலி கொடுக்கப்படும் நாள் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
18. பின்னும் கூலி கொடுக்கப்படும் நாள் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
19. (அந்நாள் தான்) எந்த ஆத்மாவும் (பிறிதோர்) ஆத்மாவுக்கு எதையும் செய்ய சக்தி பெறாத நாள்; இன்னும் அதிகாரம் (முழுவதும்) அன்றையத் தினத்தில் அல்லாஹ்வுக்கே உரியது.

---

அத்தியாயம் : 83

## அல் முதஃப்ஃபிஃபீன் _ அளவு, எடைகளில் குறைப்பவர்கள்

வசனங்கள் : 36 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (அளவையிலும், எடையிலும் மோசம் செய்து) குறைக்கக்கூடியவர்களுக்குக் கேடு உண்டாவதாக!
2. அவர்கள் எத்தகையோரென்றால், (தங்களுக்காக) மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கினால், நிறைவாக (அளந்து) வாங்கிக் கொள்கின்றனர்.
3. (ஆனால்) தாங்கள் அவர்களுக்கு (_மற்ற மனிதர்களுக்கு) அளந்து கொடுத்தாலும், அல்லது அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் (குறைத்து மோசடி செய்து அவர்களை) நஷ்டப்படுத்தி விடுகின்றனர்.
4. அத்தகையோர் _ நிச்சயமாக, தாம் (மறுமையில் உயிர் கொடுத்து) எழுப்பப்படுபவர்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?
5. மகத்தான ஒரு நாளைக்காக _
6. (அந்நாளோ) அகிலத்தாரின் இரட்சகன் முன்னிலையில் மனிதர்கள் நிற்கும் நாள்.
7. (தீயோர்கள் எண்ணுவது போல்) அல்ல! நிச்சயமாக (தீயோர்களான) பாவிகளின் (பதிவுப்) புத்தகம் ஸிஜ்ஜீனில் இருக்கிறது.
8. (நபியே!) ஸிஜ்ஜீன் என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
9. (பாவிகளின் செயல்கள்) எழுதப்பட்ட புத்தகமாகும்.
10. பொய்யாக்குபவருக்கு அந்நாளில் கேடுதான்!